# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கம்பெனிகள் (திருத்தம்)

***2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கைத்தொழில் அமைச்சர் அவர்களால் 2024, செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, ஓகத்து மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***295 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 60.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தனிப் பங்குதாரரொருவருடன் கம்பெனியொன்றைக் கூட்டிணைப்பதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அதன் பெயர் மாற்றத்தின் விடயத்தில் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கான காலஎல்லைகளை நீடிப்பதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது (2) ஆம் உட்பிரிவிலுள்ள இலக்கமிடுதற் பிழையொன்றை நிவர்த்திசெய்வதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது காவுநருக்கு அல்லது காவுநர் பங்குக்கு ஒரு பங்கு ஆணைப்பத்திரத்தின் வழங்குகையைத் தடைசெய்வதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பங்குகளின் பிரித்தொதுக்குகை தொடர்பான காலஎல்லைகள் தொடர்பான ஏற்பாடுகளைத் திருத்துவதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம் பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகள் உட்பட, கம்பெனியொன்றின் பங்குகளினது "பயனுகர் சொத்தாண்மை" தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள புதிய பிரிவொன்றை முதன்மைச் சட்டவாக்கத்தில் உட்புகுத்துவதாகும் -

(அ) ஒரு பங்குதாரரிடமிருந்து மற்றும் ஒரு கம்பெனியின் செயலாளரிடமிருந்து அல்லது ஒரு பணிப்பாளரிடமிருந்து பங்குகளின் பயனுகர் சொத்தாண்மை பற்றிய தகவல்களை வெளிவிடுவதற்காகவும் அத்தகைய தகவல்களைக் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுடன் பகிர்வதற்காகவும்;

(ஆ) ஒரு கம்பெனியின் பங்குகளினது பயனுகர் சொத்தாண்மை பற்றிய தகவல்களைக் கொண்டுள்ள இடாப்புக்கள் ஒரு கம்பெனியினாலும் பதிவாளரினாலும் வைத்திருக்கப்படுவதற்காகவும் பேணப்படுவதற்காகவும்;

(இ) பங்குகளின் பயனுகர் சொத்தாண்மை தொடர்பாகப் புரியப்பட்ட தவறுகளுக்காகவும்; அத்துடன்

(ஈ) "பயனுகர் சொந்தக்காரர்" மற்றும் "பயனுள்ள கட்டுப்பாடு" என்பனமீது புதிய பொருள் கோடல்களுக்காகவும்.

**வாசகம் 8** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 206 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஒரு கம்பெனியின் பணிப்பாளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கைமுறையை மீளநிர்ணயிப்பதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 211 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது எழுபது வயதுக்கு மேற்பட்ட பணிப்பாளரொருவரின் நியமனம் தொடர்பில் நிறைவேற்றப்பட்டவொரு தீர்மானத்தின் செல்லுபடிக் காலப்பகுதியை மீளாய்வுசெய்வதாகும்.

**வாசகம் 10 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 341 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஒரு கம்பெனி கலைக்கப்பட்டமை தொடர்பான கணக்குகளின் பிரதியொன்றையும் நடாத்தப்பட்டவொரு கூட்டத்தின் உறுதிப்படுத்துகையையும் சமர்ப்பிப்பதற்குத் தவறும் ஒழிப்போன் ஒருவர்மீது பொறுப்பொன்றைச் சுமத்துவதாகும்.

**வாசகம் 11 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 424 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது கடன்கொடுநர் குழுவொன்றினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை நிருவாகியொருவர் அத்தகைய குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதியை நீடிப்பதாகும்.

**வாசகம் 12 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 471 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்தில் புதிய ஊழியர்கோப்பை உருவாக்குவதாகும்.

**வாசகம் 13 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் சிங்கள உரையிலுள்ள பிழையொன்றை நிவர்த்திசெய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 472 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 14 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 484அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது குறித்தசில ஆவணங்களையும் தகவல்களையும் கொடுத்துதவுவதற்கான காலப்பகுதியின் நீடிப்பை ஒரு கம்பெனிக்கு வழங்குவதற்குப் பதிவாளருக்குத் தத்துவமளிப்பதாகும்.

**வாசகம் 15 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 487 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது எந்தக் கம்பெனியின் பெயர் நீக்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனிக்கு மீளப்பதிவுசெய்வதற்கும் அரசுக்குரித்தாக்கப்பட்ட அதன் ஆதனத்தை மீட்டுப்பெறுவதற்கும் அத்தகைய கம்பெனிக்கு வாய்ப்பொன்றை அளிப்பதாகும்.

**வாசகம் 16 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 508 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பிணக்கை மத்தியஸ்தத்துக்காக ஆற்றுப்படுத்துவதற்குத் திறத்தவர் கோரிக்கை விடுப்பதனை இயலச் செய்வதாகும்.

**வாசகம் 17 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 513அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது போதுமான தண்டங்களுக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 18 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 529 ஆம் பிரிவிலுள்ள "பகிர்ந்தளித்தல்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தைத் திருத்துவதாகும்.

**வாசகம் 19 :** இவ்வாசகம் நியமிக்கப்பட்ட தேதியன்று வைத்திருக்கப்பட்டதும் ஒரு கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மை பற்றியதுமான தகவல்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகளுக்காக ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 20 :** இவ்வாசகம் காவுநருக்கான அல்லது காவுநர் பங்குக்கான ஏதேனும் பங்கு ஆணைப்பத்திரத்தை ஏலவே வைத்திருப்போர், அத்தகைய காவுநர் அல்லது காவுநர் பங்குகள் தொடர்பான தகவல்களை வெளிவிடுவதற்கான கடமையொன்றை அவர்களின்மேல் சுமத்துவதாகும்.

**வாசகம் 21 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளிலுள்ள பிழைகளை நிவர்த்திசெய்வதற்கான அட்டவணையொன்றுக்காக ஏற்பாடு செய்வதாகும்.

ச.வ.ஓ. 61/2024

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்                ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் சட்டமூலமானது பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்ற தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று தவிர்ந்த கம்பெனியொன்று,-

(அ) இயற்கை ஆளொருவராக;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக; அல்லது

(இ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பங்குகளை வைத்திருக்கின்ற திறைசேரிச் செயலாளராக,

இருக்கக்கூடிய ஒரேயொரு பங்குதாரரைக் கொண்டிருக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவில், "பத்து வேலை நாட்களுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபது வேலை நாட்களுக் குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியை, (ஆ) என்னும் பந்தியாக மீள இலக்கமிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தாற்திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) கம்பெனியொன்று, அதனது அகவிதிகள் அவ்வாறு செய்வதற்கு அதனை அதிகாரமளிப் பதற்கு கருதுகின்றதென்பதைப் பொருட்படுத்தாது, காவுநருக்கு அல்லது காவுநர் பங்குக்கு பங்கு ஆணைப்பத்திரமொன்றை வழங்குதலாகாது.

இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக,-

"காவுநருக்கான பங்கு ஆணைப்பத்திரம்" என்பது, வழங்கப்பட்ட உருப்படியான ஆணைப்பத்திரச் சான்றிதழினதும், மற்றும் கண்டறியத்தக்க தன்மையில்லாமல் வேறே தேனும் ஒத்த ஆணைப்பத்திரத்தினதும் அல்லது சாதனத்தினதும் உடைமை மூலம் எந்தக் கைமாற்றத்தகு சாதனத்தின் சொத்தாண்மை தீர்மானிக்கப்படுகின்றதோ அந்தவொரு கைமாற்றத்தகு சாதனம் என்று பொருளாகும், ஆனால் பின்வருவனவற்றை உள்ளடக்காது —

(அ) ஏதேனும் சாதனம் பிரயோகிக்கப்பட்டா லொழியவும் அல்லது மீட்கப்பட்டா லொழியவும் மற்றும் பிரயோகிக்கப்படும் வரையும் அல்லது மீட்கப்படும்வரையும், குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்கீழ் கம்பெனியொன்றிலான பங்குகளுக்காக ஒப்பப்பணஞ்செலுத்துவதற்கான உரிமை களை மட்டுமே அளிக்கின்ற, ஆனால் பங்கு களிலான சொத்தாண்மையையோ அல்லது பங்குகளிலான சொத்தாண்மைக்கான உரித்துடைமையையோ அளிக்காத அச் சாதனம்; அத்துடன்

(ஆ) எந்தப் பருப்பொருளற்ற அல்லது பதிவு செய்யப்பட்ட படிவத்திலான ஆணைப் பத்திரத்தின் அல்லது வேறேதேனும் சாதனத்தின் சொந்தக்காரர்களை அடை யாளங்காணமுடியுமோ அந்தப் பருப்பொரு ளற்ற அல்லது பதிவுசெய்யப்பட்ட படிவத்தி லானவோர் ஆணைப்பத்திரம் அல்லது வேறேதேனும் சாதனம்; அத்துடன்

"காவுநர் பங்கு" என்பது, 49 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உரிமைகளைக் கொண்டி ருக்கக்கூடியதும் ஆனால் அதன் சொத் தாண்மையானது, கண்டறியத்தக்கதன்மை யில்லாமல், உருப்படியாக வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழொன்றின் மற்றும் 110 (1)(ஆ) (iii) ஆம் பிரிவில் பெயர் குறிப்பிடப்பட்ட காவுநருக்கான பிணைப் பொறுப்புப்போன்ற வேறேதேனும் ஒத்த சாதனத்தின் சாதாரண உடைமை மூலம் தீர்மானிக்கப்படுவதுமான ஒரு கைமாற்றத்தகு சாதனம் என்று பொருளாகும், ஆனால் எந்தப் பருப்பொருளற்ற அல்லது பதிவுசெய்யப்பட்ட படிவத்திலான பங்குச் சான்றிதழின் சொந்தக்

காரர்களை அடையாளங்காணமுடியுமோ அந்தப் பருப்பொருளற்ற அல்லது பதிவு செய்யப்பட்ட படிவத்திலான பங்குச் சான்றிதழை உள்ளடக்காது.".

(2) அதன் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை மற்றும் எவ்வாட்களுக்கு அத்தகைய பங்குகள் வழங்கப்படுகின்றனவோ அவ்வாட்களின் பெயர்கள்;" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(3) பிரதிபயனைப் பெற்றதன்மேல், கம்பெனியானது, அத்தகைய பிரதிபயன் பெறப்பட்டதிலிருந்து இருபது வேலைநாட்களினுள் பங்குகளின் பிரித்தொதுக்குகையொன்றைச் செய்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி, கம்பெனியின் ஒதுக்குகளிலிருந்து முழுமையாகச் செலுத்தப்படுகின்ற பங்குகளை ஒவ்வொரு பங்குதாரரினாலும் வைத்திருக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரப்படி அதே வகுப்பினரான எல்லாப் பங்குதாரர்களுக்கும் வழங்குதல் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 130 ஆம் பிரிவை உடனடுத்து (**பங்கு இடாப்பு**) பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் ஒரு புதிய பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"**பயனுகர் சொத்தாண்மை**

ஒரு கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மை பற்றிய விபரங்கள் பதிவாளருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

***130அ.*** (1) பத்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (இத்தலைப்பின்கீழ் "கம்பெனி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) இச்சட்டத்தின் கீழ் அல்லது கம்பெனிகள் தொடர்பான ஏதேனும் முன்னைய எழுத்திலான சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கம்பெனியும், கூட்டிணைக்கப்பட்ட நேரத்தில் அல்லது எவையேனும் பங்குகளின் வழங்குகையிலிருந்து அல்லது பங்குகளின் கைமாற்றுகையிலிருந்து இருபது வேலை நாட்களினுள் பின்வருவனபற்றி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் -

(அ) கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களின் அடையாளங்காணல் ஆவணத்தில் காணப்படுகின்றவாறான முழுப்பெயர்கள் முன்னைய முழுப்பெயர்கள் (ஏதேனுமிருப்பின்);

(ஆ) கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களின் பிறப்புத்தேதிகளும் பிறப்பிடங்களும், நாட்டினங்களும், வதிவிட நாடுகளும், கடைசியாக அறியப்பட்ட முகவரிகளும்;

(இ) கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களின் வதிவிட முகவரிகளும், தொழில் முகவரிகளும், மின்னஞ்சல் முகவரிகளும், அஞ்சல் முகவரிகளும்;

(ஈ) கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், வரி அடையாளங்காணல் இலக்கங்கள், அல்லது கடவுச்சீட்டிலக்கங்கள் மற்றும் வழங்குகை நாடுகள்;

(உ) கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர் களின் தொடர்பு விபரங்கள்; அத்துடன்

(ஊ) பயனுகர் சொத்தாண்மையின் தன்மை யையும் அளவையும் விவரிக்கின்ற ஒரு முழுமையான கூற்று

(2) ஒவ்வொரு பங்குதாரரும், எவையேனும் பங்குகளின் கொள்வனவு அல்லது பங்குகளின் கைமாற்றுகையிலிருந்து பத்து வேலைநாட் களினுள், கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மை தொடர்பாக (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப் பட்ட விபரங்களை கம்பெனிக்குக் கொடுத்தல் வேண்டும்.

(3) கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது செயலாளரும், பயனுகர் சொந்தக் காரர்கள் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விபரங்களை அவர் அத்தகைய விபரங்களை அறியவரும்போது, பதிவாளருக்கு வெளிவிடுதல் வேண்டும்.

(4) (அ) கம்பெனியானது இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், அது அறியவரும் போது (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட விபரங்களைப் பதிதலும் வேண்டும் அத்துடன் கம்பெனியானது, கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் பற்றிய அத்தகைய இடாப்பை, 116 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் வைத்திருத் தலும் வேண்டும்.

(ஆ) கம்பெனியொன்றின் பங்கு இடாப்பின் இடம் தொடர்பாக 124 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் பற்றிய இடாப்புக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(5) (அ) கம்பெனியானது, கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களின் விபரங்களும் கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மையின் தன்மையும் அளவும் பற்றிய பதிவேடுகளை, அப்பதிவேடு தயாரிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் ஆகக்குறைந்தது பத்தாண்டுக் காலப்பகுதிக்கேனும் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(ஆ) கலைப்பின்கீழுள்ள ஒரு கம்பெனியின் நிருவாகி அல்லது ஒழிப்போன் மற்றும் ஒரு கம்பெனியின் கலைப்பில் சம்பந்தப்பட்ட வேறெவரேனும் ஆள், கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களின் விபரங்களும் கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மையின் தன்மையும் அளவும் பற்றிய பதிவேடுகளை, கம்பெனி கலைக்கப்படும் அல்லது வேறுவகையாக இராதொழியும் தேதிக்குப் பின்னர் ஆகக்குறைந்தது ஐந்தாண்டுக் காலப் பகுதிக்கேனும் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(6) பதிவாளர் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட விபரங்களைப் பதிவதற்கு இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

(7) கம்பெனியானது, ஆளொருவர் கம்பெனியொன்றின் பயனுகர் சொத்தாண்மையை வைத்திருக்கின்றார், கொள்கின்றார் அல்லது அதன் அடுத்துப்பின்னரான மாற்றமொன்றைப் பயனுறுத்துகின்றார் என்ற விபரங்களைப் பெற்றதன் மேல், பதினான்கு வேலை நாட்களினுள், (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய விபரங்களைப் பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(8) ஒவ்வொரு கம்பெனியும், (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 131 ஆம் பிரிவின் கீழான வருடாந்த விபரத்திரட்டுடன்

சேர்த்து விதித் துரைக்கப்படக்கூடியவாறான படிவமொன்றில் கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் பற்றிய விபரங்களை வழங்குதல் வேண்டும்.

(9) பங்குகளில் அல்லது தொகுதிக்கடன்களில் அக்கறை கொண்டுள்ள ஆட்கள் பற்றிய தகவல்களைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவம் தொடர்பாக 181 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(10) பிரிவுகள் 130அ முதல் 130ஐ வரையிலானவற்றின் ஏற்பாடுகள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டு இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கரைகடந்த கம்பெனியொன்றுக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்றுக்கு, அத்தகைய கம்பெனியானது எந்நாட்டில் கூட்டிணைக்கப் பட்டுள்ளதோ அந்நாட்டில் பயனுகர் சொத்தாண்மைப் பதிவுக்கு இணங்கியொழுகும்படி அது தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, ஏற்புடையனவாதலாகாது.

(11) இப்பிரிவில் "கம்பெனிகள் தொடர்பான முன்னைய எழுத்திலான சட்டம்" என்னும் சொல்லமைப்பு, (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச்சட்டத்தினால் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தினால் நீக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டம் என்று பொருளாகும்.

கொடுத்துதவப்பட வேண்டிய விபரங்கள்.

**130ஆ.** ஒரு கம்பெனி அல்லது பதிவாளர், சட்டத்துறைத் தலைமையதிபதியினால், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறினால், சுங்கப் பணிப்பாளர் தலமையதிபதியினால்,

உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதி பதியினால், பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் அல்லது வேறெவையேனும் குற்றவியல் தவறுகள் என்பவற்றைப் புலனாய்வு செய்வதற்கான அல்லது அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ள ஏதேனும் பகிரங்க அதிகாரியினால், பகிரங்கப் பெறுகை அதிகாரசபையினால், அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளினால் விடுவிக்கப்பட்ட கோரிக்கையின் மேல், 130அ என்னும் பிரிவின்கீழ் வைத்திருக்கப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் பற்றிய விபரங்களைக் கிடைக்கக் கூடியவையாக்குதல் வேண்டும்.

*விபரங்களைக் காப்பாக வைத்திருப்பதற்காகவும் கிடைக்கக் கூடியனவாக்குவதற்காகவும் ஆளொருவரை நியமித்தல்.*

**130இ.** (1) கம்பெனியொன்று -

(அ) கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் பற்றிய இடாப்பைக் காப்பாக வைத்திருப்பதற்குப் பொறுப்பாகவுள்ளவரான; அத்துடன்

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறுக்கு அல்லது எவரேனும் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு, 130அ என்னும் பிரிவின் நியதிகளின்படி பதியப்பட்ட கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் பற்றியவையுமான விபரங்களைக் கிடைக்கக்கூடியனவாக்குவதற்குக் கம்பெனியினால் அதிகாரமளிக்கப்பட்டவரான,

இலங்கையில் வதிகின்ற இயற்கை ஆளொருவரை அதிகாரமளிக்கப்பட்ட ஆளாக நியமித்தல் வேண்டும்.

(2) கம்பெனியானது கூட்டிணைக்கப்படும் நேரத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள்பற்றிய விபரங்களையும் மற்றும் அத்தகைய அதிகார மளிக்கப்பட்ட ஆளுக்கான எவையேனும் அடுத்துப்பின்னரான மாற்றங்களையும் விதித் துரைக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்தில் வெளிவிடுதல் வேண்டும்.

பொது மக்களுக்கான விபரங்கள்.

**130ஈ.** கம்பெனியொன்றின் பயனுகர் சொந்தக் காரர்கள் பற்றிய விபரங்கள், பொது மக்களின் உறுப்பினரொருவரினால் சோதனைக் கான கோரிக்கையின்மேல், இலத்திரனியல் ரீதியிலாயினுஞ்சரி அல்லது பௌதீக ரீதியிலாயி னுஞ்சரி, பதிவாளரினால் கிடைக்கக்கூடியன வாக்கப்படுதல் வேண்டும், ஆனால் கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்களின் விபரங்கள் அவர்களின் முழுப்பெயர்களுக்கும் கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மையின் தன்மைக்கும் அளவுக்கும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

கம்பெனியின் பயனுகர் சொந்தக் காரர்கள் பற்றிய இடாப் பொன்றை வைத்திருப் பதற்கும் பேணுவ தற்கும் தவறுதல்.

**130உ.** கம்பெனியொன்று —

(அ) பிரிவு 130அ வில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருப்பதற்கும் பேணு வதற்கும் தவறியுள்ளது அல்லது தவறுகின்றது; அல்லது

(ஆ) பிரிவு 130அ வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் காலப் பகுதிக்கு இணங்கியொழுகு வதற்குத் தவறியுள்ளது அல்லது தவறுகின்றது,

என நம்புவதற்குப் பதிவாளருக்கு நியாயமான ஏதுக்களிருப்பின், பதிவாளர், எழுத்தில், பணிப்புரையொன்று பெறப்படுகின்ற தேதியிலிருந்து ஏழு வேலை நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் பிரிவு 130அ வின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும்படி கம்பெனியை அறிவுறுத்துகின்ற அப்பணிப்புரையைக் கம்பெனிக்கு வழங்குதல் வேண்டும்.

பயனுகர் சொத்தாண்மைக்கான உரிமைக் கோரிக்கையொன்று.

***130ஊ.*** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மைக்கான உரிமைக்கோரிக்கையொன்று, அத்தகைய பயனுகர் சொத்தாண்மை இத்தலைப்பின்கீழ் தரப்பட்டுள்ள முறையில் வெளிவிடப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டாலொழிய, சட்டமுறையான ஏதேனும் நோக்கத்துக்காக உரிமைகோரப்படக் கூடியதாகாது அல்லது ஏற்றங்கீகரிக்கப்படக் கூடியதாகாது.

தவறுகள்.

***130எ.*** (1) (அ) பிரிவு 130அ வின் உட்பிரிவுகள் (1), (3), (4), (7) அல்லது (8) என்பவற்றை மீறுகின்ற அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஆ) கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்பற்றி அல்லது கம்பெனியினது பயனுகர் சொத்தாண்மையின் தன்மையும் அளவும் பற்றிப் பொய்யான அல்லது பிழை வழியுய்க்கும் விபரங்களை அறிந்துகொண்டு வழங்குகின்ற;

(இ) பிரிவு 130அ வின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இடாப்பினுட் பதியப்பட வேண்டிய கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர் பற்றிய விபரங்களை அறிந்துகொண்டு வெளிவிடாதிருக்கின்ற; அல்லது

(ஈ) பிரிவு 130அ வின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இடாப்பினுட் பொய்யான பதிவீடொன்றை அறிந்துகொண்டு செய்கின்ற,

கம்பெனியொன்று தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழான தவறொன்று புரியப்படுமிடத்து, அப்போது, அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவராகவிருந்த ஒவ்வோராளும், அத்தகைய ஆள் அறியாமல் அத்தவறு புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அத்தகைய ஆள் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகிக்காரென அத்தகைய ஆள் எண்பித்தாலொழிய, அத்தவறைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முறையே பிரிவு 130அ வின் (2) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது பிரிவு 130அ வின் (3) ஆம் உட்பிரிவின் அல்லது பிரிவு 130இ இன் கீழான ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒரு பங்குதாரர், செயலாளர் அல்லது அதிகாரமளிக் கப்பட்ட ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**130ஏ**. பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர் பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) கம்பெனியின் பயனுகர் சொத் தாண்மை பற்றிய இடாப்பைப் பேணு தல்;

(ஆ) கம்பெனியின் பயனுகர் சொத் தாண்மை பற்றிய கொள்ளுத லொன்றை அறிக்கையிடுதல்; அத்து டன்

(இ) கம்பெனியின் பயனுகர் சொத் தாண்மை தொடர்பான விபரங்களைப் பெறுதல்.

பொருள் கோடல்.

**130ஐ**. இப்பிரிவில் -

"பயனுகர் சொந்தக்காரர்" என்பது, ஒரு கம்பெனியிலான நேரடியான அல்லது நேரடியல்லாத சொத் தாண்மை அல்லது பங்குகளின் கட்டுப்பாடு அல்லது வாக்களிக்கும்

உரிமைகள் அல்லது வேறு சொத்தாண்மை அக்கறையினூடாக, முழுமையாக அல்லது பகுதியளவில், அக்கம்பெனியின் பத்துசத வீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை இறுதியாகச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஓர் இயற்கை ஆள் என்று பொருளாகும் என்பதுடன், வேறு வழிவகைகளினூடாகப் பயனுள்ள கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற ஓர் இயற்கை ஆளையும் உள்ளடக்கும்; அத்துடன் பயனுகர் சொத்தாண்மை என்பது, அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

"பயனுள்ள கட்டுப்பாடு" என்பது, ஒன்றில் ஒரு சொத்தாண்மைச் சங்கிலியினூடாக அல்லது பணிப்பாளரொருவரை நியமிப்பதன் மூலம் அல்லது அகற்றுவதன்மூலம் அல்லது கம்பெனியின் தொழிற்பாட்டை அதன் தொழிற் செயல்முறைகளை அல்லது பொதுவான பணிப்பைப் பாதிக்கின்ற மூலோபாய முடிபை எடுப்பதற்கான ஆற்றல் போன்ற நேரடியல்லாத கட்டுப்பாட்டின் வேறெவையேனும் வழிவகைகளினூடாகப் கட்டுப்பாடானது நேரடியாக அல்லாமல் பிரயோகிக்கப்படும் ஒரு நிலைமையையும் உள்ளடக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 206 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 206 ஆம் பிரிவு, அதன் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"*(2)* ஒரு பணிப்பாளரை அகற்றி அவ்வாறு அகற்றப்பட்ட பணிப்பாளரின் இடத்தில் புதியவொரு பணிப்பாளரை நியமிப்பதற்குக் கம்பெனியொன்று உட்கருதுமிடத்து, கம்பெனியின் எல்லாப் பங்குதாரர்களுக்கும் விசேட அறிவித்தலொன்று கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அகற்றப்படவுள்ள பணிப்பாளருக்கு அவ்விசேட அறிவித்தலின் பிரதியொன்றை அனுப்புதல் கம்பெனிச் செயலாளரின் கடமையாதலும் வேண்டும். அத்தகையவொரு பணிப்பாளர் அக்கம்பெனியின் பங்குதாரரொருவராக இருக்கின்றமையைப் அல்லது இல்லாதிருக்கின்றமையைப் பொருட்படுத்தாது, அத்தகைய கூட்டத்தில் கேட்கப்படுவதற்கு அத்தகைய பணிப்பாளர் உரித்துடையவராதல் வேண்டும்.

*(3)* இரண்டாம் உப்பிரிவின்கீழான விசேட அறிவித்தலைப் பெற்றதன்மேல், சம்பந்தப்பட்ட பணிப்பாளர், அவ்விசேட அறிவித்தலைப் பெற்ற தேதியிலிருந்து பதினான்கு வேலை நாட்களினுள், கம்பெனியின் ஒவ்வொரு பங்குதாரருக்கும் அறிவிக்கும்படி கம்பெனியைத் தேவைப்படுத்தி எழுத்திலான முறையீடொன்றைக் கம்பெனிக்குச் செய்யலாம்.

*(4)* கம்பெனியின் செயலாளர், உடனடியாக, கம்பெனியின் ஒவ்வொரு பங்குதாரருக்கும் அம்முறையீட்டின் பிரதி யொன்றை அனுப்புதல் வேண்டும். கம்பெனியின் அசட்டை காரணமாக அல்லது முறையீடானது அதன்கண் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதியொன்று முடிவுற்றபின்னர் பெறப்பட்ட தென்ற நிகழ்வு காரணமாக முறைப்பாட்டின் பிரதியொன்று அனுப்பப்படாதுள்ளவிடத்து, கம்பெனிச் செயலாளர், அத்தகைய பணிப்பாளர் அவ்வாறு தேவைப்படுத்தினால், கூட்டத்தில் அம்முறையீட்டை வாசித்துக்காட்டுதல் வேண்டும்:

ஆயின், அவதூறான தன்மையினதான அவசியமற்ற பிரசித்தத்தைப் பெறுவதற்கெனச் சம்பந்தப்பட்ட பணிப்பா ளரினால் இப்பிரிவின் ஏற்பாடுகள் துர்ப்பிரயோகம் செய்யப் படுகின்றனவெனக் கம்பெனியானது நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துவதற்கு இயன்றதாகவுள்ளவிடத்து, கம்பெனி யானது, அத்தகைய பணிப்பாளரினால் செலவுதொகைகள்

செலுத்தப்படுவதற்கும், பங்குதாரர்களுக்கு அத்தகைய முறையீடு அனுப்பப்படுவதனை அல்லது கூட்டத்தில் அத்தகைய முறையீடு வாசித்துக்காட்டப்படுவதனைத் தவிர்ப்பதற்கும் நீதிமன்றக் கட்டளையொன்றை நாடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 211 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 211 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "அவரது நியமனத்திலிருந்து ஒரு வருடத்திற்கு மட்டும் வலிதானதாக இருக்கும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சட்டத்தின் 133 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கமைய, அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டம்வரை வலிதானதாக இருக்கும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 341 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 341 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டங்களின் தேதியிலிருந்து ஒருவாரத்தினுள் அல்லது அதேதேதியில் அத்தகைய கூட்டங்கள் எவையும் நடைபெறாதவிடத்து அடுத்துப்பின்னரான கூட்டத்தேதியிலிருந்து, ஒழிப்போன், கணக்குகளின் பிரதியொன்றைப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன் கூட்டங்களை நடாத்தியமையும் அவற்றின் தேதிகளும் பற்றிய நிகழ்வை உறுதிப்படுத்தி அவருக்கு விபரத்திரட்டொன்றைச் செய்தலும் வேண்டும்; அத்துடன் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பிரதி அனுப்பப்படாதவிடத்து அல்லது விபரத்திரட்டு செய்யப்படாத விடத்து, ஒழிப்போன் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 424 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 424 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "நிருவாகியைத் தேவைப்படுத்தலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"நிருவாகியைத் தேவைப்படுத்தலாம்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தேவைப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு நிருவாகியொருவர் இயலாதவராக உள்ளவிடத்து, அத்தகைய நிருவாகி, அத்தகைய இயலாமைக்கான காரணங்களை ஒரு விண்ணப்பத்தில் எடுத்துக்கூறி அதனைப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கலாம். விண்ணப்பத்தையும் காரணங்களையும் கவனத்துட்கொண்ட தன்மேல், பதிவாளர், தகவல்களை வழங்குவதற்காகக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை, நியதிநிபந்தனைகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமைய, நீடிக்கலாம். பதிவாளர் தனது முடிபை நிருவாகிக்கும் கடன்கொடுத்தோர் குழுவுக்கும் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 471 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 471 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், பந்தி (அ) வை உடனடுத்துப் பின்வரும் புதியவொரு பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(அஅ) கம்பெனிகள் மேலதிகப் பதிவாளர்கள் தலைமையதிபதியாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குப் பெயர் குறிக்கப்பட்ட அல்லது பதவிகுறிக்கப்பட்ட ஆட்கள்;";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "கம்பெனிகள் பிரதிப் பதிவாளர் தலைமையதிபதியொருவராக (1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "கம்பெனிகள் மேலதிகப் பதிவாளர்

தலைமையதிபதியொருவராக அல்லது கம்பெனிகள் பிரதிப் பதிவாளர் தலைமையதிபதியொருவராக (1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அதன் (2) அம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவ தனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(3) கம்பெனிகள் பதிவாளர் தலைமை யதிபதித் திணைக்களத்தின் ஏதேனும் வகுப் பினரான அல்லது வகுதியினரான அலுவலர் களுக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் விதித்துரைக்கப்படக்கூடிவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊக்கு விப்புப்படி செலுத்தப்படலாமென்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந்தோராதலும் வேண்டும்.".

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 472 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 472 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"(1) பதிவாளரின் செயலொன்றின்மூலம் அல்லது முடிபொன்றின்மூலம் இன்னலுறும் ஆளொருவர், அச்செயல் அல்லது முடிபுபற்றிய அறிவித்தலைப் பெற்ற தேதிக்குப் பின்னர் பதினைந்து வேலைநாட்களினுள் அல்லது நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலத் தினுள் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 484 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 484அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 484அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

"செயல்களுக்காகக் காலநீடிப்பை வழங்குவதற்குப் பதிவாளருக்குள்ள தத்துவம்.

**484அ.** (1) பிரிவு 484 இன் (1) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதிக்குமுன்னர் கம்பெனியொன்று அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுவதற்கு அல்லது ஏதேனும் புத்தகத்தை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தைக் காண்பிப்பதற்கு இயலாததாக உள்ளவிடத்து, அத்தகைய கம்பெனி, அத்தகைய காலப்பகுதியை நீடிப்பதற்கான விண்ணப்பமொன்றை அதற்கான காரணங்களுடன் சேர்த்து பதிவாளருக்குச் செய்யலாம். விண்ணபத்தையும் காரணங்களையும் கவனத்துட்கொண்டதன்மேல், பதிவாளர், விதிப்பதற்குத் தகுதியானவையென அவர் கருதக்கூடியவாறான நியதிநிபந்தனைகளுக்கமைய காலப்பகுதியை நீடிக்கலாம். பதிவாளர் தனது முடிபைக் கம்பெனிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(2) கம்பெனியானது (1) ஆம் உட்பிரிவின் கீழான நீடிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து,-

(அ) கம்பெனியானது தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்குப் பொறுப்பாதலும் வேண்டும்;

(ஆ) கம்பெனியின் தவறுகையிலுள்ள ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 487 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 487 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவில், "கையுதிர்ப்பில் அரசுக்கு கடமையாதலும் அரசுக்கானதாதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

"அரசுக்குரித்தாதலும் அதனால் கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்:

ஆயின், எந்தக் கம்பெனியின் பெயர் (3) ஆம் உட்பிரிவின் கீழ் வெட்டப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கம்பெனி, இந்தத் திருத்தச் சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பத்தாண்டுக் காலப்பகுதியொன்று முடிவுறுமுன்னர் சட்டத் துறைத் தலைமையதிபதியை அத்தகைய விண்ணப்பத்துக்கான திறத்தவரொருவராக்கி நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய கம்பெனி ஏன் இயலாமலிருந்ததெனக் காரணங்களைக் குறிப்பிட்டு நீதிமன்றத்தின் திருப்திக்குக் காரணம் காட்டலாம். அவசியமென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின்பின்னர், நீதிமன்றம், அக்கம்பெனியின் மீள்பதிவை அனுமதிக்கலாமென்பதுடன் அத்தகைய பதிவின்மேல் இவ்வுட்பிரிவின்கீழ் முன்னர் அரசுக்கு முன்னர் உரித்தாக்கப்பட்ட எல்லா ஆதனங்களையும் கம்பெனிக்குத் திருப்பிக்கொடுப்பதற்கான கட்டளையொன்றையும் ஆக்கலாம்:

ஆயின், மேலும், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அரசுக்குரித்தாக்கப்பட்ட ஆதனம் அரசினால் கையாளப் பட்டுள்ளவிடத்து அல்லது கையுதிர்க்கப்பட்டுள்ளவிடத்து, அரசிடமிருந்து நல்லெண்ணத்துடன் அத்தகைய உரிமைகளைக் கொள்ளுதல் செய்துள்ள மூன்றாந்திறத்தவர்களின் உரிமைகள் எம்முறையிலும் பாதிக்கப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், ஆதனமானது அழிக்கப்பட்டுள்ள விடத்து அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது ஆதனத்தின் பௌதிக உடைமை அரசினால் எடுக்கப் பட்டிராதவிடத்து, அரசானது எம்முறையிலும் எவரேனும் திறத்தவருக்குப் பொறுப்பாதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 508 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 508 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில் எழுகின்ற; அல்லது

(ஆ) ஏதேனும் கம்பெனியின் அலுவல்களை முகாமை செய்தல் தொடர்பான,

ஒரு பிணக்குக்கான திறத்தவரொருவர், பிணக்கானது கம்பெனிகள் பிணக்குகள் சபையின் உறுப்பினரொருவர் முன்னர் மத்தியஸ்தத்துக்காக ஆற்றுப்படுத்தப்படவேண்டுமெனக் கம்பெனிகள் பிணக்குகள் சபையைக் கோரலாமென்பதுடன் கம்பெனிகள் பிணக்குகள் சபையின் தலைவர், தோதானதென அவர் கருதினால், கம்பெனிகள் பிணக்குகள் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அதனை மத்தியஸ்தத்துக்காக ஆற்றுப்படுத்தலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 513அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 513 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது, அச்சட்டவாக்கத்தின் 513அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பொதுவான தண்டங்கள்.

**513அ.** (1) எந்தத் தவறுக்காகத் தண்டனையெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்தத் தவறு தொடர்பில், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர், பணிப்பாளரொருவர், செயலாளரொருவர் அல்லது அலுவலரொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம்

ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு ஓர் ஆட்கள் குழுவினால் மீறப்படுமிடத்து அல்லது விட்டுவிடப் படுமிடத்து அல்லது அதற்கு இணங்கியொழுக தவறப் படுமிடத்து மற்றும் இச்சட்டத்தில் தண்டனையெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாதவிடத்து, அத்தகைய ஆட்கள் குழு-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) குழுமமொன்றாக விருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும்,

தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆளெவரும், தவறானது தான் அறியாமல் புரியப்பட்டது அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தான்

உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தால், அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 529 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 529 ஆம் பிரிவில், "பகிர்ந்தளிப்பு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினது (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அ) பங்குதாரரொருவருக்கு அல்லது அவரது நன்மைக்காக, கம்பெனியினது ஒதுக்குகளின் மூலதனமாக்குதலொன்றின்மூலம் கம்பெனியின் பங்குகள் தவிர்ந்த பணத்தை அல்லது ஆதனத்தை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கைமாற்றுதல்; அல்லது".

*நியமிக்கப்பட்ட தேதியன்று வைத்திருக்கப்பட்ட கம்பெனியின் பயனுகர் சொத்தாண்மை தொடர்பான விபரங்களை அறிக்கையிடுதல், பெறுதல் முதலியன தொடர்பான விசேட ஏற்பாடுகள்*

**19.** (1) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அல்லது கம்பெனிகள் தொடர்பான ஏதேனும் முன்னைய எழுத்திலான சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் அல்லது பதிவுசெய்யப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதியன்று பயனுகர் சொந்தக்காரர்களைக் கொண்டுள்ளதுமான ஒவ்வொரு கம்பெனியும், விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும், பிரிவு 130அ வின் நியதிகளின்படி அக்கம்பெனியின் பயனுகர் சொந்தக்காரர்கள் தொடர்பான விபரங்களை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் பதிவாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் ஒவ்வோர் ஏமவைப்புக் காப்பாளரும், விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும், நியமிக்கப்பட்ட தேதியன்று கம்பெனியின் வழங்கப்பட்ட பங்குகளின் பத்துச் சதவீதத்தை அல்லது அதற்குமேற்பட்டதை வைத்திருந்த கம்பெனியின் பங்குதாரர்கள் பற்றிய விபரங்களை, நியமிக்கப்பட்ட

தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் சரிபார்ப்பதற்கும், அறிக்கையிடுவதற்கும், பதிவதற்கும், பதிவாளருக்கு அறிவிப்ப தற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு கம்பெனியும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தி லும் முறையிலும், நியமிக்கப்பட்ட தேதியன்று கம்பெனியின் சொந்தக்காரர்கள் பற்றிய விபரங்களை நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் சரிபார்ப்பதற்கும், அறிக்கை யிடுவதற்கும், பதிவதற்கும் பதிவாளருக்கு அறிவிப்பதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற கம்பெனி யொன்று தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங் களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவில் "கம்பெனிகள் தொடர்பான முன்னைய எழுத்திலான சட்டம்" என்னும் சொல்லமைப்பு, (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச்சட்டத்தினால் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினால் அல்லது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினால் நீக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டம் என்று பொருளாகும்.

*காவுநருக்கான அல்லது காவுநர் பங்குக்கு எவையேனும் பங்கு ஆணைப் பத்திரங்களை ஏலவே வைத்திருப்ப வரின் கடமை*

**20.** (1) காவுநருக்கு அல்லது காவுநர் பங்குக்கு எவையேனும் பங்கு ஆணைப்பத்திரங்களை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களினுள் அத்தகைய நிகழ்வுபற்றி வழங்குகின்ற கம்பெனிக்கு அறிவித்தல் வேண்டு மென்பதுடன் அவரது பெயரையும், முகவரியையும், அத்துடன் வேறு தொடர்பு விபரங்களையும் கம்பெனிச் செயலாளருக்கு எழுத்தில் வழங்குதலும் வேண்டும்.

(2) கம்பெனியானது (1) ஆம் உட்பிரிவின்கீழான விபரங்களைப் பெற்றதன்மேல், அத்தகைய விபரங்களை உடனடியாகப் பதிவுசெய்தல் வேண்டும்.

(3) காவுநருக்கு அல்லது காவுநர் பங்குக்கு எவையேனும் பங்கு ஆணைப்பத்திரங்களை வைத்திருப்பவர் எவரும் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அத்தகைய காவுநருக்கு அல்லது காவுநர் பங்குக்கான ஆணைப் பத்திரங்களுடன் இணைந்துள்ள எவையேனும் உரிமைகள் அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதியின் முடிவில் வெற்றானதாக்கப்பட்டவையாதல் வேண்டும்.

(4) காவுநருக்கான அல்லது காவுநர் பங்குகளிற்கு எவையேனும் பங்கு ஆணைப்பத்திரங்களை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களினுள் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழான வெற்றானதாக்குகையின்மேல் அத்தகைய காவுநருக்கான அல்லது காவுநர் பங்குகளிற்கான பங்கு ஆணைப்பத்திரங்களை 123 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழான பங்குதாரர் இடாப்பின் நோக்கத்துக்காகப் பதிவுசெய்யப் படத்தக்க படிவத்திலான பங்குகளாக மாற்றுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் குறித்தசில பிரிவுகளைத் திருத்துதல்

**21.** இதற்கான அட்டவணையின் நிரல் I றில் குறித்துரைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள், அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக அதன் நிரல் III றிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றன.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** [பிரிவு 21]

| இல. | நிரல் I திருத்தப்பட்ட பிரிவுகள் | நிரல் II நீக்கவும் | நிரல் III உட்புகுத்தவும் |
|---|---|---|---|
| 1 | 28(1) | "தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்" | "தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்" |
| 2 | 37(3)(அ) | "பங்குகளுக்கு அல்லது தொகுதிக்கடன்களுக்கு" | "பங்குகளுக்கு அல்லது தொகுதிக்கடன்களுக்கு" |
| 3 | 40(3)(ஆ) | "ஆவணங்கள் (எவையேனுமிருப்பின்)" | "ஆவணங்கள் (எவையேனுமிருப்பின்)" |
| 4 | 40(4) | "விவரமஞ்சரியொன்று" | "விவரமஞ்சரியொன்று" |
| 5 | 41 (ஓரக்குறிப்பு) | "விவரமஞ்சரியில் உண்மையற்ற குடியியல் பொறுப்பு". | "விவரமஞ்சரியில் உண்மையற்ற கூற்றுத் தொடர்பிலான பொறுப்பு". |
| 6 | 41(2)(இ) | "பகிரங்க அறிவித்தல்" | "பகிரங்க அறிவித்தல்" |
| 7 | 44(ஆ) | "கூட்டிணைக்கப்பட்ட குறிப்பீடு" | "கூட்டிணைக்கப்பட்ட குறிப்பீடு" |
| 8 | 61(3)(ஆ) | "பணிப்பாளருக்கு நிவாரணமளித்தல்" | "பணிப்பாளருக்கு நிவாரணமளித்தல்" |
| 9 | 64(3)(ஆ) | "முனைவொன்றைச் செய்கின்ற" | "முனைவொன்றைச் செய்கின்ற" |
| 10 | 67(2)(ஆ) | "56 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக" | "56 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக" |
| 11 | 77(1) | "பங்குகளுக்கான அல்லது கடனாளிகளுக்கான உரித்து", | "பங்குகளுக்கான அல்லது கடனாளிகளுக்கான உரித்து", |
| 12 | 84(2) | "அதே முன்னுரிமைகள்", | "அதே முன்னுரிமைகள்", |
| 13 | 84(4) | "இன்னொரு தொகுதிக் கடனை வழங்குதல்" | "இன்னொரு தொகுதிக் கடனை வழங்குதல்" |

| | | | |
|---|---|---|---|
| *14* | *84(5)* | "எவரேனுமாள் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் முன்னுரிமை", | "எவரேனுமாள் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் முன்னுரிமை", |
| *15* | *86(3)* | "பங்குகள் கைமாற்றப்பட்டுள்ள", | "பங்குகள் கைமாற்றப்பட்டுள்ள", |
| *16* | *92(1)(ஆ)* | "நோக்கத்துக்கான கொடுக்கல்வாங்கல்", | "நோக்கத்துக்கான கொடுக்கல்வாங்கல்", |
| *17* | *92(1)(உ)* | "உட்பிரிவு (1)" | "உட்பிரிவு (1)" |
| *18* | *95(2)* | "(1) ஆம் உட்பிரிவின்கீழ்" | "(1) ஆம் உட்பிரிவின்கீழ்" |
| *19* | *98(2)* | "கம்பெனியும்" | "கம்பெனியும்"; |
| *20* | *102(4)* | "இப்பிரிவின் ஏற்பாடுகள்", | "இப்பிரிவின் ஏற்பாடுகள்". |
| *21* | *102(11)(அ)* | "ஐம்பதாயிரம் ரூபா", | "ஐம்பதாயிரம் ரூபா", |
| *22* | *111(4)* | "இணங்கியொழுகத் தவறுகின்ற", | "இணங்கியொழுகத் தவறுகின்ற", |
| *23* | *116(2)* | "மற்றும் பந்தி (ஏ) இலுள்ள குறிப்பீடுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக | "மற்றும் பந்தி (ஏ) இலுள்ள குறிப்பீடுகள்" |
| *24* | *119(1)(ஆ)* | "எல்லாப் பங்குதாரர்களுக்குமான எழுத்திலான தொடர்பாடல்கள்" | "எல்லாப் பங்குதாரர்களுக்குமான எழுத்திலான தொடர்பாடல்கள்" |
| *25* | *127* | "புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாள்", | "புழக்கத்திலுள்ள ஏதேனும் செய்தித்தாள்", |
| *26* | *129(1)* | "பங்கு இடாப்பில் பதியப்பட்ட", | "பங்கு இடாப்பில் பதியப்பட்ட", |
| *27* | *142(5)* | "ஒரு விண்ணப்பத்தின்மீது கம்பெனியின் ஆகுசெலவுகள்". | "ஒரு விண்ணப்பத்தின்மீது கம்பெனியின் ஆகுசெலவு". |

| இல. | நிரல் I<br>திருத்தப்பட்ட<br>பிரிவுகள் | நிரல் II<br>நீக்கவும் | நிரல் III<br>உட்புகுத்தவும் |
|---|---|---|---|
| 28 | 152(1)(இ) | "சார்பில் கையொப்பமிடுதல்", | "சார்பில் கையொப்பமிடப் பட்டது." |
| 29 | 167(1) | "வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை", | "வருடாந்த அறிக்கை", |
| 30 | 168(1)(ஒ) | "துணைநிலைக் கம்பெனிகள்", | "துணைநிலைக் கம்பெனிகள்", |
| 31 | 168(2) | "(1) ஆம் உட்பிரிவின் (ஈ) முதல் (ஒ) வரையிலான பந்திகளில்,", | "(1) ஆம் உட்பிரிவின் (ஈ) முதல் (ஒ) வரையிலான பந்திகளில்,". |
| 32 | 175(5) | "எவ்வாறிருப்பினும்", | "எவ்வாறிருப்பினும்", |
| 33 | 180(4) | "பரிசோதகரொருவர் நியமிக்கப்படுமிடத்து", | "பரிசோதகரொருவர் நியமிக்கப்படுமிடத்து", |
| 34 | 182(3) | "நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்", | "நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்", |
| 35 | 185(2) | "உருவ அல்லது அருவ", | "உருவ அல்லது அருவ", |
| 36 | 220(1) | "வேலைநாட்களிலிருந்து" | "வேலைநாட்களிலிருந்து" |
| 37 | 220(4) | "அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதியளிக்கின்ற" | "அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதியளிக்கின்ற" |
| 38 | 228(இ) | (iii) | (iii) |
| 39 | 241(3)(உ) | "இயலச்செய்வதற்கு அவசியமான" | "இயலச்செய்வதற்கு அவசியமான" |
| 40 | 242(1)(ஆ)(iii) | "சபை திருப்திப்படின்" | "சபை திருப்திப்படின்" |
| 41 | 242(5) | "சான்றிதழொன்றைக் கையொப்பமிடுதல்" | "சான்றிதழொன்றைக் கையொப்பமிடுதல்". |

| | | | |
|---|---|---|---|
| 42 | 245(ஊ) | "ஓர் ஒன்றுசேர்க்கை யின் மூலம் அல்லது அதற்கெதிராக", | "ஓர் ஒன்று சேர்க்கையின் மூலம் அல்லது அதற்கெதிராக", அவ்வாறு |
| 43 | 246(3) | "கொள்ளப்பட வேண்டிய" | "கொள்ளப்பட வேண்டிய". |
| 44 | 248(2) | "(1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ்" | "(1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ்" |
| 45 | 249(2)(ஆ)(vii) | "விபரங்களைக் கொண்டுள்ள" | "விபரங்களைக் கொண்டுள்ள" |
| 46 | 273(1) | "ஓர் ஒடுக்குதல் மனுவைக் கேட்டதன்மீது", | "ஓர் ஒடுக்குதல் மனுவைக் கேட்டதன்மீது", |
| 47 | 274(ஆ) | "மேற்கொண்ட வழக்கு நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கு", | "மேற்கொண்ட வழக்கு நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கு", |
| 48 | 283(1) | "பிணையங்கள் முறையாகக் கொடுக்கப்பட்டபோது", | "பிணையங்கள் முறையாகக் கொடுக்கப்பட்டபோது", |
| 49 | 284(1) | "ஒடுக்குதற் கட்டளை யொன்று" | "ஒடுக்குதற் கட்டளை யொன்று" |
| 50 | 287 | "பயனுள்ளதாதல் வேண்டும்", | "பயனுள்ளதாதல் வேண்டும்", |
| 51 " | 290 | "ஒடுக்குதற் கட்டளையொன்று" | "ஒடுக்குதற் கட்டளையொன்று" |

| இல. | நிரல் I திருத்தப்பட்ட பிரிவுகள் | நிரல் II நீக்கவும் | நிரல் III உட்புகுத்தவும் |
|---|---|---|---|
| 52 | 292(2)(இ) | "வங்கிமுறிந்த வரிடமிருந்து அல்லது கடனிறுக்க வகையற்றவரிடமிருந்து வருமதியான தனிவேறான தனிசொன்றாகவும், ஏனைய தனிவேறான கடன்கொடுநர்களுடன் வீதப்படியும் அம்மீதி தொடர்பிலான நடுக்கட்டல்;" | "வங்கிமுறிந்த வரிடமிருந்து அல்லது கடனிறுக்க வகையற்றவரிடமிருந்து வருமதியான தனிவேறான தனிசொன்றாகவும், ஏனைய தனிவேறான கடன்கொடுநர்களுடன் வீதப்படியும் அம்மீதி தொடர்பிலான நடுக்கட்டல்;". |
| 53 | 292(2)(ஏ) | "அலுவலர்களை ஒடுக்குதல்" | "அலுவல்களை ஒடுக்குதல்". |
| 54 | 296(4) | "விதித்துரைக்கப்பட்ட கட்டணம்" | "விதித்துரைக்கப்பட்ட கட்டணம்". |
| 55 | 298(1) | "இறுதி விபரத்திரட்டைச் செய்தார்" | "இறுதி விபரத்திரட்டைச் செய்தார்". |
| 56 | 298(3) | "எல்லாப் பொறுப்பி லிருந்தும் அவரை விடுவித்தல்", | "எல்லாப் பொறுப்பி லிருந்தும் அவரை விடுவித்தல்", |
| 57 | 299(1) | "தனிவேறான கூட்டங்கள்" | "தனிவேறான கூட்டங்கள்". |
| 58 | 324(1) | "பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத", | "பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத". |
| 59 | 326(2) | "பணிப்பாளர்களின்" | "பணிப்பாளர்களின்", |
| 60 | 328(1) | "ஒழிப்போன் அல்லது அதிகாரியொருவர்", | "ஒழிப்போன் அல்லது அதிகாரியொருவர்". |

| | | | |
|---|---|---|---|
| 61 | 352 | "நியாயாதிக்கம் கொடுக்கும் நோக்கத்துக்காக", | "நியாயாதிக்கம் கொடுக்கும் நோக்கத்துக்காக", |
| 62 | 358(11)(அ) | "ஆக்குகின்ற அல்லது அதிகாரமளிக்கின்ற", | "ஆக்குகின்ற அல்லது அதிகாரமளிக்கின்ற". |
| 63 | 373(4)(அ) | "ஒருமாதக் காலப்பகுதி" | "ஒருமாதக் காலப்பகுதி". |
| 64 | 377(6) | "குத்தகையில் குத்தகை பெறுநரின் பொருத்துகைகள்", | "குத்தகையில் குத்தகை பெறுநரின் பொருத்துகைகள்", |
| 65 | 387 | "முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்", | "முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்", |
| 66 | 389(3) | "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்", | "நீதிமன்றங்களுக்கு மேன்முறையீடு செய்யலாம்". |
| 67 | 396(3) | "பிரதிச் செயலாளருக்கு", | "பிரதிச் செயலாளருக்கு", |
| 68 | 404(5) | "முன்மொழிவுகளைத் தயாரித்தல் வேண்டும்", | "முன்மொழிவுகளைத் தயாரித்தல் வேண்டும்". |
| 69 | 414 (ஓரக்குறிப்பு) | "நியமிக்கப்படுவதற்கான சம்மதம்" | நியமிக்கப்படுவதற்கான சம்மதம்". |
| 70 | 428(2) | "பதிவுசெய்யப்படுதல் வேண்டும்", | "பதிவுசெய்யப்படுதல் வேண்டும்"; |
| 71 | 428(3) | "ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின் 16 முதல் 22 வரையிலான பிரிவுகள்" | "ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின் 16 முதல் 22 வரையிலான பிரிவுகள்". |
| 72 | 431(6) | "அக்காணி தொடர்பில் மிதக்கும் விதிப்பனவு பதிவுசெய்யப் பட்டிருந்தாலொழிய,", | "அக்காணி தொடர்பில் மிதக்கும் விதிப்பனவு பதிவுசெய்யப் பட்டிருந்தாலொழிய,", |

| இல. | நிரல் I<br>திருத்தப்பட்ட<br>பிரிவுகள் | நிரல் II<br>நீக்கவும் | நிரல் III<br>உட்புகுத்தவும் |
|---|---|---|---|
| 73 | 449(2)(அ) | "ஈடுபெறுநரின்<br>சம்மதத்தைப் பெற்றுக்<br>கொள்வதற்கு", | "ஈடுபெறுநரின்<br>சம்மதத்தைப் பெற்றுக்<br>கொள்வதற்கு". |
| 74 | 450(3)(ஈ) | "கடப்பாடுகளை<br>நிறைவேற்றுவதற்குக்<br>கோரப்படுவதன்மேல்;" | "கடப்பாடுகளை<br>நிறைவேற்றுவதற்குக்<br>கோரப்படுவதன்மேல்";<br>அத்துடன் |
| 75 | 450(4) | "செயலாற்றுவதி<br>லிருந்து<br>தவிர்த்தல்" | "செயலாற்றுவதி<br>லிருந்து<br>தவிர்த்தல்" |
| 76 | 470(1) | "நோக்கங்களுக்காக", | "நோக்கங்களுக்காக". |
| 77 | 472(2) | "நீதிமன்றம்"<br>(அது அவ்வுட்பிரிவில்<br>தோன்றுமிடத்தெல்லாம்) | "நீதிமன்றம்". |
| 78 | 481(3) | "இப்பிரிவிலுள்ள<br>தெதுவும்<br>நடைமுறையைப்<br>பங்கப்படுத்துதலாகாது", | "இப்பிரிவிலுள்ள<br>தெதுவும்<br>நடைமுறையைப்<br>பங்கப்படுத்துதலாகாது". |
| 79 | 482 | "பதிவாளர் தலைமை<br>யதிபதியின் திணைக்களம்<br>(அது காணப்படும்<br>இடமெல்லாம்)" | "கம்பெனிகள்பதிவாளர்<br>தலைமையதிபதியின்<br>திணைக்களம்" |
| 80 | 514(1) | "இச்சட்டத்தின்கீழ் தாபிக்<br>கப்பட்ட நிதியத்துக்கு<br>வரவுவைக்கப்படுதல்", | "இச்சட்டத்தின்கீழ் தாபிக்<br>கப்பட்ட நிதியத்துக்கு<br>வரவுவைக்கப்படுதல்". |
| 81 | 519(3) (இ) | "அந்நோக்கத்துக்காக<br>அமைக்கப்பட்டவொரு<br>பங்காண்மை", | "அந்நோக்கத்துக்காக<br>அமைக்கப்பட்டவொரு<br>பங்காண்மை". |
| 82 | முதலாம்<br>அட்டவணை<br>17 (3) | "பத்து சதவீதத்துக்குக்<br>குறைவான", | "பத்து சதவீதத்துக்குக்<br>குறைவான". |
| 83 | முதலாம்<br>அட்டவணை<br>17 (4) | பத்து சதவீதத்துக்குக்<br>"குறைவான", | "பத்து சதவீதத்துக்குக்<br>குறைவான". |

| | | | |
|---|---|---|---|
| 84 | முதலாம் அட்டவணை 31(1) | சபையானது காலத்துக்குக் காலம்", | சபையானது காலத்துக்குக் காலம்". |
| 85 | நான்காம் அட்டவணை பாகம் I (7) | "முன்னைய ஒவ்வொரு பிரித்தொதுக்குகையும்". | "முன்னைய ஒவ்வொரு பிரித்தொதுக்குகையும்". |
| 86 | நான்காம் அட்டவணை பாகம் I (9) | "அப்பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள்"; | "அப்பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள்" |
| 87 | நான்காம் அட்டவணை பாகம் II 20(3)(ஆ)(i) | "சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இணைத்தல்" | "சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இணைத்தல்"; |
| 88 | நான்காம் அட்டவணை பாகம் II 20(3) (ஆ) (ii) | "சொத்துக்களும் பொறுப்புக்களும்" | "சொத்துக்களும் பொறுப்புக்களும்"; |
| 89 | நான்காம் அட்டவணை பாகம் II 22(1)(அ) | "பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள்" | "பங்குகள் மற்றும் தொகுதிக் கடன்கள்" |
| 90 | நான்காம் அட்டவணை பாகம் II 22(2)(ஆ) | "கூட்டிணைக்கப்பட்ட குழு துணைநிலைக் கம்பெனிகளையுடையது" | "கூட்டிணைக்கப்பட்ட குழு துணைநிலைக் கம்பெனிகளையுடையது". |
| 91 | ஐந்தாம் அட்டவணை (அ) | "பொதுக் கூட்டம்" | "பொதுக் கூட்டம்". |
| 92 | ஐந்தாம் அட்டவணை (ஆ) | "விவரத்திரட்டின் தேதியில் பங்குதாரர்களாக விருந்த". | "விவரத்திரட்டின் தேதியில் பங்குதாரர்களாக விருந்த". |